முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1276

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

28.03.2023, செவ்வாய்கிழமை

1. தர்மபலம் கொண்ட அரங்கனே
   தவபலம்மிக்க தேசிகனே
   பெருமைமிக்க ஞான உலகம் அமைக்க
   பிரணவக்குடில் படைத்த குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
   அருளுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
   வரமென ஞான அறிவுரை ஆசி
   வழங்குவேன் சுபகிருது சேல் திங்கள் தன்னில்
   (சுபகிருது வருடம் பங்குனி மாதம் 14 ம் நாள், 28.03.2023, செவ்வாய்கிழமை)
3. தன்னிலே அரங்கன் சக்திதனை
   தரணியெங்கும் தர்ம சக்தியாக்கி
   மண்ணுலகம் மகிழ்வுற அமைதிபெற
   மகா பாதுகாப்பும் பெறவேண்டி இனிதே
4. இனிதே ஆறுமுகன் யான்
   ஆற்றலாக எங்கும் அரங்கன் புகழை எடுத்துச்சென்று உலக மக்களுக்கு
   மாற்றம் அருளும் வண்ணம் வேதமாக
   மண்ணுலகில் சன்மார்க்க விதை விதைத்து
5. விதைத்துமே உலகோரைக் காக்கும் வண்ணம்
   வேலவன் யான் அற்புதம் நடத்துகின்றேன்
   உதவிபட அரங்கன் தர்மத்தில் உயர்வாக இணைந்த மக்களெல்லாம்
   பதவி சிறப்பு யோகமோடு பழுதில்லா ஞானவான்களாய் சிறந்து
6. சிறந்து இந்த கலியுகத்தில்
   சிறப்பறிவு கூடி இனிதே
   மறுப்பின்றி அரங்கன் சக்தியாலே
   மரணம் வெல்லும் யோகமும் அடைந்து சிறப்பர்

7. சிறப்புதரும் அரங்கனே கலியின்
சித்திமிகு உயர் ஞானியப்பா
அறத்தின்வழி அரங்கன் தொடர்புகூட்டி
ஆன்மீக ஞான உண்மை வழிகளை
8. வழிகளை ஆராய்ந்து உலகோர்
உயர்வுபட இணைந்து தொண்டாற்ற
உலகமெல்லாம் ஞான ஆட்சி
உயர்வாக வேலவன் என் ஆசியோடு
9. ஆசிபட அரங்கன் நோக்கமாக
அனைத்தும் வெற்றிகாணக் கூடும்
வாசி வென்ற ஞானத் தலைமைகள் எல்லாம்
வலம்வந்து அரங்கன் நோக்கம் பூர்த்தி செய்வர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–